**வீதிச் செயற்திட்டத்தைத் தயார்படுத்தலுக்கான வசதியின் செயற்திட்டம் - 2014**

வீதிச் செயற்திட்டத்தைத் தயார்படுத்தலுக்கான வசதியின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் 2004 யூன் 16 இல் கைச்சாத்திடப்பட்ட 2080 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் iv ஆம் உறுப்புரையின் 4.06 (பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

வீதிச் செயற்திட்டத்தைத் தயார்படுத்தலுக்கான வசதியின் கடன் உடன்படிக்கையின் படி, நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கை அரசாங்கம் தனது வீதி வலையமைப்பை வினைத்திறனாக விருத்திசெய்வதற்கு ஆதரவளித்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,969 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 20 மில்லியனானதுடன் அதில் ரூபா 1,476.75 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 15 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2004 செப்தெம்பர் 15 இல் தொடங்கியிருந்ததுடன் 2008 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக்காலம் 2015 யூன் 30 வரை 06 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த

பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்தும் வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட நிதிசார் அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவைகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட குறிப்புரைகளிற்கிணங்க செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக் கூற்றுக்களானவை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கடப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கடப்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 6,729,144 கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் வரிசை அமைச்சினால் அமுலாக்கப்பட்ட இன்னொரு செயற்திட்டதிற்கு 2014 சனவரி 01 இல் மாற்றப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக அவற்றின் மீது ரூபா 904,023 தொகையான பெறுமானத் தேய்வு நடைபெறும் வேலைக்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலையின் பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலங்கள் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2014 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப் பட்ட நிதிகள் |
|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ்.டொலர் மில். | ரூபா. மில் | ரூபா. மில் | யூ.எஸ்.டொலர் மில். | ரூபா. மில் | ரூபா. மில் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 15 | 1,476.75 | 218.8 | 1.68 | 218.76 | 1,759.71 |
| இலங்கை அரசாங்கம் | 05 | 492.25 | 3.0 | - | 2.14 | 385.64 |
| | 20 | 1,969.00 | 221.8 | 1.68 | 220.90 | 2,145.35 |

**3.2 பௌதீக முன்னேற்றம்**

--------------------------------

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2,200 கிலோமீற்றர் தேசிய வீதிகள் மற்றும் 2,900 கிலோமீற்றர் மாகாண வீதிகள், புனரமைப்பு நோக்கத்திற்காக சாத்தியவள ஆய்வுகள் மற்றும் விரிவான வடிவமைப்பு என்பவற்றினை மேற்கொள்வதற்கு மாகாண வீதி முகவர்களின் பங்குபற்றலுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, உள்ளூராட்சி மற்றும் மகாணசபைகள் அமைச்சு மற்றும் மாகாண சபைகள் என்பவற்றல் தெரிவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ரூபா 1,965 மில்லியன் கிரயத்தில் 3,165 கிலோமீற்றர் தேசிய வீதிகள் மற்றும் 3,119 கிலோமீற்றர் மாகாண வீதிகள் என்பவற்றின் புனரமைப்பிற்கு மதியுரை சேவைகள் வழங்குவதற்கு ஒப்பந்தம்மொன்று வழங்கப்பட்டிருந்தது. அதில் 1,821 கிலோமீற்றர் தேசிய வீதிகள் மற்றும் 3,143 கிலோமீற்றர் மாகாண வீதிகள் என்பவற்றிற்கான விரிவான வடிவமைப்பு மற்றும் சாத்தியவள ஆய்வு என்பன 2014 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

**3.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

----------------------------------------

செயற்திட்டத்தால் நிலையான சொத்துப் பதிவேடொன்று தனித்தனியாக பேணப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துக்களின் பொதுவான பதிவேடு வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் மற்றும் வீதிச் செயற்திட்டத்தைத் தயார்படுத்தலுக்கான வசதியால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிற்காக பேணப்பட்டிருந்தது. இதன்விளைவால், இச் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை கணக்காய்வில் இனங்கண்டு மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.